1046

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 FEB 1926
MADRAS

ஸ்ரீ

நவரசம் பொருந்திய

நவரத்தினத் தாலாட்டு.

பெ. ஆறுமுக முதலியா ரவர்களால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1925. [அணா 3.

ரிஜிஸ்டர் காபி ரைட்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமர் தாலாட்டு.

பேராமயோத்திப் பெருமாளைத்தாலாட்டச்
சீரார்குருகையர்கோன் சேவடிகள்காப்பாமே க

அன்றமரர்க்காக அயோத்தியெனும்பட்டணத்திற்
சென்றவதரித்த திருமாலைச்சொன்னாரோ உ

தெள்ளுதமிழ்க்கொண்டாடச் சீரார்தசரதற்குப்
பிள்ளைவிடாய்த்தீர்த்த பெருமாளைச்சொன்னாரோ ங

காவலழியக் கருதிலங்கைதானழிய
மூவருடன்பிறந்து மூவுலகையாண்டாரோ ச

கருதலர்கள்காவலனே கண்ணார்ந்தகற்பகமோ
பரிவுடையதாயார்க்குப் பார்குடமாய்நின்றானே ரு

வீராதிவீரனே வேந்தர்சூடாமணியோ
சீராமனென்னுந் திருநாமம்பெற்றானே சு

பேராற்பெரியவனே பேருலகையாண்டவனே
சீரார்சிறப்புடைய செங்கண்முகின்மேனியனே எ

குவலயத்தோர்கொண்டாடக் குடுமிப்பிராயத்தே
தவமுனிவன்சொற்கேட்டு தாடகையையெய்தவனே அ

மாசிலாமுத்தோ மணிவயிரத்தோளானே
கோசிகனார்வேள்விக் குறைதவிர்த்தகாவலனே கூ

அரியகுடிக்கரசோ வாடவற்குப்போரேரோ
பெரியதொருசிலையைப் பெண்வடிவுசெய்தவனே கo

அலைகடல்சூழ்வையகத்தே ஆருமசைக்கவொண்ணாச்
சிலையைவளையக்குனித்துச் சீதைமணஞ்செய்தவனே கக

தாய்கைகேசிசொற்படிக்குத் தாமமுடிசூடாமல்
சீதையுடன்கானகத்தே சென்றபெருமாளோ கஉ

தாமமணிமார்பனே தம்பிதுணையுள்ளவனே
மாமுனிவர்க்கெல்லா மனக்கவலைதீர்த்தவனே கங

தாக்குடனேபேசுந் தனக்கடங்காசூர்ப்பனகை
மூக்கறிந்தசேவகர்க்கு முன்புவந்தசேவகனே கச

தன்மாயைக்காட்டித் தையலுள்ளமாலாக்கும்
பொன்மானின்பின்போன புண்ணியனைசொன்னாரோ கரு

அக்கானகத்தே யணிமயிலைத்தேடுதற்குச்
சுக்ரீவன்தன்னுடனே தோழமையைக்கொண்டானே கசு

கோலமதக்களிரோ கொற்றவர்தம்பேரேரோ
வாலிதனைக்கொல்லவொரு வாளியெய்தசேவகனே கஎ

ஆழிகொடுத்தே யனுமானைத்தூதனுப்பி
வாழுமிலங்கைநகர் வழிபார்த்துநின்றவனே கஅ

இருள்கடலைத்தாண்டி யிலங்கைநகர்தீமூட்டி
திரும்பிஅனுமானுரைக்கச் சீதைசெயல்கேட்டவனே ககூ

வானரங்களென்று மகாசேனைதன்னுடனே
தானிலங்கைவேரறுக்கத் தண்டெடுத்தசேவகனே உ0

அடல்பெரியவீரியனே வன்புகுடிகொண்டவனே
கடல்கலங்கமுன்னாள் கணைதொடுத்தசேவகனே உக

துலங்கும்பெருங்கடலைத் தூர்த்தேறியப்புரம்போய்
இலங்கைநகர்கண்ட விராகவனைச்சொன்னாரோ உஉ

கொக்கரித்துவானரங்கள் கூத்தாடவெத்திசையும்
அக்கடலைப்பின்னிட் டரக்கர்பதிபுக்கவனே உங

குன்றுபோல்வந்த கொடியதொருராவணனை
இன்றுபோய்நாளைவா வென்றபெருமாளோ உச

நாடிய்ரக்கர்பதி நாலாயிரவெள்ளத்துடன்
கூடிவரும்ராவணனைக் கொன்றபொருமாளோ உரு

பத்துமணியும் பத்திரண்டுதிண்டோளும்
தத்திவிழவெய்த தடம்பெரியசேவகனே உசு

எட்டிலங்கையைச்சுட் டிலக்குமியைத்தான்மீட்டுச்
சட்டமுடையயோத்திநகர் சார்ந்தரகுராமனே உஎ

பூண்டமணித்தேரும் பொன்னிலங்கைமாநகரம்
மீண்டுமவன்றம்பி விபீஷணருக்கீந்தவனே உஅ

சீராமராமனே சீதைசிறைமீட்டவனே
பேரார்பெரியவனே பேருலகையாண்டவனே உகூ

செப்பமுடன்சேர்த்தெடுத்த ஸ்ரீராமன்தாலாட்டை
முப்பதுங்கற்றவர்கள் மூவுலகையாள்வாரே. ௩0

ஸ்ரீராமர் தாலாட்டு முற்றிற்று.

0—181 N
N25

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீரங்கநாயகர் திருவூசல்.

தனிசிறந்தமுத்ததினுற் கால்கணட்டி
தார்ப்பவளக்கொம்பதினுர் கொடுங்கைமாட்டி
வார்சிறந்தவைரத்தாற் பலகைபூட்டி
வண்ணநவமணிமாலை வயங்கசூட்டி
ஏர்சிறந்தசித்திரங்க ளெங்குந்தீட்டி
இலகுதிருப்பொன்னூசா சேர்வைகாட்டி
சீர்சிறந்தமாதவனு ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். க

வச்சிரமணிதங்கத்தாற் கால்கள்நாட்டி
வைரங்கோமேதகத்தாற் பலகைபூட்டி
பச்சையெனுமரகதத்தாற் கொடுங்கைநாட்டி
பசும்பொன்னின்சங்கிலியால் வடங்கள்பூட்டி
உச்சிதமாய்வானவர்கள் சமைத்தவூசல்
உலகளந்தமாயவனு ருண்மையாக
செச்சையணிமாயவனு ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். உ

மாமறையைநவமணியாய்க் கால்களாக்கி
வழுத்துமறுசாத்திரத்தைப் பலகையாக்கி
தூமருவும்புராணத்தைக் கொடுங்கையாக்கி
சொல்லரியபலகலையைச் சங்கிலியாக்கி
பூமகளும்நிலமகளும் பொற்பாயோங்க
பொன்னுலகோர்கெய்தளித்த பொன்னினூசல்
சதமருவும்வண்டுளப மாலைபூண்ட
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். ௩

அணிஅணியாய்த்தேவர்கள்வந் தடிகொண்டாட
அந்தரர்கின்னரர்கருட ரணிந்துபாட
கணிகையர்கள்கொலுமுகத்திற் களித்தேயாட
கன்னியர்களிருமருங்குங் கவரிபோட
பணிவுடனேமுனிவரெல்லாம் பரிந்துதேட
பன்னிருவராழ்வார்கள் பதத்தினுடை
திணிவுபெருந்திருமார்பா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். ௪

மாமறையோர்மாமுனியோர் வருந்திப்போற்ற
வானவர்கள்பூமாரி மகிழ்ந்துதூற்ற
சேமமுடனேம்முரகஞ் சிரக்கச்சாற்ற
தெரிவையர்கள்திருதாலஞ் சிறக்கச்சாற்ற
பூமகளும்பார்மகளு மருங்கில்வாழ்க
பொன்னடியிலாழ்வார்கள் பொலிந்துதாழ
தேமருவுங்காவேரி சிறந்துசூழ
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். ௫

பொன்னணிந்தநவமணிமா மாலையாட
புகழ்பெரியவண்டுளப மாலையாட
வன்னமுள்ளச்சந்திரவட்டக் குடைகளாட
மகாமணிக்கண்டிகையா மாலையாட
மன்னுமணிமுடியாடப் பதக்கமாட
வாகுவலயங்களுமே யோங்கியாட
செந்நெல்விளையல்சூழ்ந்து நெறிந்தேயோங்கும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். ௬

இந்திரரும்வானவரும் வடந்தொட்டாட்ட
இறையவரும்மறையவரும் வடந்தொட்டாட்ட
சந்திரரும்சூரியரும் வடந்தொட்டாட்ட
தானவரும்வானவரும் வடந்தொட்டாட்ட

காந்தவருங்குழன்மடவார் வடந்தொட்டாட்ட
கோகனம்பொற்பாதங் குலுங்கிடாடச்
சிந்தைமகிழ்ந்திருவரங்க ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். ௭

சதுர்மறையைத்திருடியவன் றன்னைவென்றோன்
தனியிலங்கைராவணனார் தலையுங்கொன்றோன்
அதிசயமாய்ப்பாண்டவரைக் காத்தமூர்த்தி
ஆலிலைமேல்பள்ளிகொண்ட வாதிமூர்த்தி
கதிரொளியாய்ப்புவியளந்த கருணையாளன்
கன்னியர்கள் துகிலுரிந்த கள்ளமாயன்
சதுரிலகுஞ்ஸ்ரீரங்க ராடிரூசல்
ஜானகிமணாளனே ராடிரூசல். ௮

சங்கரனுமைங்கரனும் மகிழ்ந்துவாழ்த்த
சதுர்முகனுமறுமுகனுந் தாழ்ந்துபோற்ற
துங்கமுள்ளநவசித்தர் துதித்துப்போற்ற
சொல்லும்பதினெண்கணமுந் தொழுதுபோற்ற
எங்குமுள்ளவண்டத்தோரேத்திப்போற்ற
ஈராறுமாழ்வார்க ளினங்கிபோற்ற
செங்கமலையாளுடனேயாடிரூசல்
ஸ்ரீரங்கராயகனா ராடிரூசல் ௯

மலர்மேவுதிருமகளோர் பக்கமேவ
வாட்டடங்கணிலமகளோர் பக்கமேவ
நலமேவுபன்னிரண் டாழ்வார்கள்போற்ற
நாதமுனிமுதலானோர் வணங்கியேத்த
வலமேவுமைம்படைகள் கையிலோங்க
மருமார்பிற்கவஸ்துவா பரணமாடச்
சிலைமேவுமர்க்கரத்தா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். ௧௦

இடையினிற்பீதாம்பரத்தா னிருந்துமின்ன
எழிற்கரத்திற்பஞ்சவா யுதங்கள்மின்ன
வடிவுபெருந்திருமேனி வண்ணமின்ன
மதிவதனங்கிருபையொடு மகிழ்ந்துமின்ன
முடிதனிலேமுடிமாலை முயங்கிமின்ன
மொழிமார்பிற்கவுஸ்துவா பரணந்துன்ன
திடமேவுங்காவேரி சிறந்துசூழும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். கக

ஸ்ரீரங்கநாயகர் திருவூசல்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

ஸ்ரீ கிருஷ்ணலாலி

காப்பு வஞ்சித்துறை.

திருசடசோபனங் குருபதம்வாழ்த்தியே
மருகிஷ்ணலாலித் தெருளுடனேதுவாம்.

ஸ்ரீ கிருஷ்ணலாலி-கேதாரம்.

சிங்காரபெண்கள்வாரீர்-ஸ்ரீகிருஷ்ண
சீர்மைமலிலாலிகூற
மங்களகரங்கள்வருமே-மாதவன்
மதுரமுற்றிலகும்லாலி.

பச்சையுளகம்பமீது-கடைந்திட்ட
பவளபோதிகைபொருத்தி
இச்சையுடன்வச்சரத்தாற்-செதுக்கிய
யேமதூண்களுமமர்த்தி. உ

சுயரூபமெனகட்டினர்-மண்டபஞ்
சுந்தரப்பொன்னினாலே
நயஞ்செறிமணக்கோர்வையுமுத்தார
நன்னயவிதானமீதே. ௩

நவமணித்தொட்டிலுக்கே-உயர்தங்க
நாணயக்கொலுசுமாட்டி
புவனத்தரதிசயிக்க-விச்சித்திர
பூமாலையைசூட்டினார். ௪

தேவசமுகங்கள்கண்டு-இந்நகர்
தேவேந்த்ரப்புரமிதென்ன

ஆவலுடனாரதாதி-யிசைபாட
அமரருடனங்குவந்தார். ரு

சங்கீதஞ்சகிகள்பாட-கிருஷ்ணர்க்கு
சம்பங்கிதைலமிட்டே
மங்களஸ்நானமகிழ்-ஆட்டினர்
மங்கையர்களழகுபெறவே. சு

சொகுசுடன்கிருஷ்ணர்க்கு-மாணிக
மேபொன்னுடைகட்டி
அகணிதமிகுத்தமணிகள்-ஸ்தாபித்த
ஆபரணம்பூட்டலானர். எ

புலிநகக்கொலுசுகளையே-கிருஷ்ணர்க்கு
பூட்டியேரரிவைமார்கள்
நவிவிலாபாஜிபந்தை-புஜதனி
நலமுடன்கட்டினர்கள். அ

தகதகெனுங்குண்டலத்தை-காதினில்
தரித்துதாமோதரர்க்கே
நிகநிகெனுமரைஞாணுடன்-சதங்கையு
நேருடன் கட்டலானர். கூ

அங்குலியமாதரணையாய்-விரல்தனி
லமையவேவரிசையாகச்
சிங்காரமாகசெய்தார்-கிருஷ்ணனை
சிலைநுதற்பாவைமார்கள். ௧0

பீதகங்கணகொலுசுகள்-கைகட்குப்
பேரொளிசெயத்தரித்து
பாதஙளினங்களிகை-ரத்தினப்
பாடகந்தண்டைகொலுசும். கக

குருவுள்ள பணிகள் பூட்டி-சிரசிற்கு
குப்பிசடைபில்லைமாட்டி
இருசுமல்லிகைமுல்லையுஞ்-சம்பங்கி
இருவாட்சிபாரிஜாதம். கஉ

குருவேறுதவனமருவு-மாரமுட
குழலதனிற்சூட்டிமிகவே
அரிசந்தனைதிபுனுகு-ஜவ்வாது
ஆமோதகற்பூரமும். கங

உரமாககஸ்தூரியுங்-கவந்துமே
ஒப்புடன்கூட்டிபெண்கள்
அரியுரகாந்தனணிலுங்-கண்டத்தி
லமரிக்கையாய்ப்பூசினர். கச

முத்துகிருஷ்ணன்றனக்கே-நெற்றியின்
மோககஸ்தூரிதிலகம்
சித்தினிகள் வைத்துயாலஞ்-சேர்ப்பித்து
திருஷ்டிகழிபொட்டுவைத்தார். கரு

பேரிமத்தளசங்கமுந்-தாளமொடு
பேரொலியெக்காளபடகம்
வாரிபோற்குமுறசெய்தே-நாகசுர
வாத்தியமுழக்கினர்கள். கசு

ரம்பையூர்வசிமேனகை-திலோர்த்தமை
ரமணீயநடனமாட
தும்புருநாரதர்களே-யாழிலெழு
சுரசுதிகளோடுபாட. கஎ

பந்துஜனமொருலக்ஷமும்-வேதாந்த
பார்ப்பார்களொருலக்ஷமுஞ்
சுந்தரிகளொருலக்ஷமும் பிராமண
சுமங்கலிகலொருலக்ஷமும். கஅ

அந்தமாசபையைநோக்கி-பூமழைக
ளமரமாதவர்கள்பொழிய
வந்தியர்க்கவியில்புகழ-கிருஷ்ணரிட
வைபவம்பாருமீர்காள். கரு

நவமோகனுங்கனுக்கே-கோபிகைகள்
நாகரீகங்கள்செய்து
புவனிதனிலேயுள்ளவர்-துதிசெயும்
புருஷோத்தமனை வேண்டினர். உ0

பவரோகவைத்யனம்மா-இக்கிருஷ்ணன்
பக்தரைக்காப்பனம்மா
கமலநாபனைதொட்டிலில்வைத்தனர்
கஞ்சமுகவனிதைமார்கள். உக

லாலிமங்களமிசைத்தார்-கோகோ
லாவண்யப்பெண்கள்கூடி
பாலன்றொட்டினிலிருக்க-பக்தியுடன்
பலவிதங்கூறினரே. உஉ

லாலிவைகுந்தவாசா-ஸ்ரீஹரி
லக்ஷ்மீமனோவுலாசா
லாலிபன்னகசயனனே-நந்தசுத
லாலிஸ்ரீபரமபுருஷா. உங

லாலிமச்சாவதாரா- ஸ்ரீகிருஷ்ண
லாலிகூர்மாவதாரா
லாலிவராஹாவதாரா-பவதுரித
லாலிசிம்ஹாவதாரா. உச

லாலிகுறளாவதாரா-கோவிந்த
லாலிபரசுராமனே
லாலிராமாவதாரா-பலராம
லாலிகிருஷ்ணாவதாரா. உரு

லாலிபௌத்தாவதாரா-ருஷிகேச்
லாலிகற்கியாவதாரா
லாலிதசவிதரூபனே-மாபுவனி
ரக்ஷித்தசத்வகுணனே. உசு

தேவகிவசுதேவரி-புத்திரா
திவ்வியமங்களமூர்த்தியே
தேவாதிதேவர்செய்யுந்-துதிபெற்ற
தேவனேதிக்குநீயே. உஎ

காவவாகருணாநிதி-ஸ்ரீகிருஷ்ண
கலியாணகுணஸ்ரீபதி
பாவமறவருள்செய்வா-முரஹரி
பலபத்ரவநுஜவரசே. உஅ

நந்தகோபனசோதையின்-புத்ரனாய்
நல்லிருளிலேயடைந்தே
சந்ததம்பசுநிறைகளே-பாலித்து
தயிர்களவிலுண்டபெரியோய். உகூ

நந்தகோபன்மனையிலே-திருமாது
நடனங்கள் புரியக்கண்டு
இந்துமுகசோன ததன்ய-பாலதனை
ஈந்திடமகிழ்ந்தமதலாய். ௩0

என்னநோன்புநூற்றளோ-பூர்வத்தி
லியாதுதபஞ்செய்தளோ
என்னபுண்ணியஞ்செய்தளோ-அசோதைதா
னென்னதர்மஞ்செய்தளோ. ௩க

சாமளசுரூபனுடைய-நிதிகட்கு
சறியாதுபுகள்வதம்மா
சோமரவிபிரமனனுந்-தேவர்களுந்
துதிசெய்யவேபிறந்தான். ௩உ

வேதவேதியருக்கெல்லா-கோதானம்
வேணலக்ஷங்கொடுத்தே
வாதானங்கனகாஜித-வஸ்திரம்
வரையாது தான்கொடுத்தார். ௫௩

கந்தபுஷ்பாதிகளையே அணைவற்குங்
கனமாகவேபகிர்ந்து
நந்தநந்தனனைக்கண்டு-அசோதர்
நந்தனுமுளங்களித்தார். ௫௪

க்ஷீராப்பதிசயனருங்-கிருஷ்ணனிட
சீலச்சரித்ரமதையே
கோரியேநேரும்-கேட்போருங்
குறைவினிதிபெற்றுவாழ்வார். ௫௫

தாரித்ரதிசையேகுமே-சத்புத்ர
தனதானியம்பெருகுமே
ஈறிலாச்சக்திவருமே-சொல்லிடி
லிகபரசௌக்யந்தருமே. ௫௬

கோயமாநகரில்வளரும்-புஜபல
கோத்திரந்தனிற்பிறந்த
பாயசஞ்சின்னரௌது-ஆந்திரப்
பாஷையிர்பாடியதையே. ௫௭

ஸ்ரீவிசிஷ்டாத்துவைத-சித்தாந்த
சென்னைபிரபோதசங்கம்
நேயமாயதிலொருவனும்-வைணவரி
னிமலதாட்டேனியணியும். ௫௮

கோவிந்தசாமிதமிழால்-பாடிடுங்
கோபாலலாலிதன்னை

பூவிலுள்ளோர்களன்பாய்சொல்லிடில்
புகழ்பெற்றுவாழ்வர்மாதோ. ௩௬

லாலிலாலையலாலி-ஸ்ரீகிருஷ்ண
லாலிலாலையலாலி
பாலசகிமார்கள்லாலி-கோவிந்த
பாதயுகமங்களலாலி. ௪0

ஸ்ரீகிருஷ்ணலாலி-முற்றிற்று.

உ

கணபதி துணை.

சிதம்பரத்தாலாட்டு.

விநாயகர் - காப்பு.

வெண்பா

சீராருந்தில்லைச் சிதம்பரரைத்தாலாட்ட
ஏரார்சிவகாமி யீன்றெடுத்த - பேரான
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமெய்ப்பெருமாள்
வந்துவரந் தந்தருளுவாய்

தாலாட்டு

சிந்தைமகிழச் சிதம்பரரைத்தாலாட்ட
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமுன்னடவாய் க

தானந்தழைக்கத் தரணியுள்ளோரீடேற
ஆனந்தத்தாண்டவமாய் ஆடுஞ்சிதம்பரனே. உ

மங்கைசிவகாமி சுந்தரியாள்மாதேவி
அங்கையமுதளிக்க ஆனமிர்தங்கொண்டானே. ந

நால்வேதங்கோபுரமாய் நாட்டியபஞ்சாக்கரத்தில்
ஆலேசிவாலயமாய் ஆடுஞ்சிதம்பரனே. ச

வெண்ணிலவேவெண்மதியே வெண்குடையேதில்லைவரும்
அண்ணலுடன்கூடிவிளை யாடவாவம்புலியே. ரு

நாகப்பணிபூண்டு காகங்கரத்துடித்தி
நாகமலர்முடித்து நடிக்குஞ்சிதம்பரனே. சு

தேடியதோர்நான்மறையும் தேவர்களுமீடேற
ஆடியுடன்கூடிவிளை யாடவாவம்புலியே. எ

பொன்னம்பலத்தே புகுந்துவிளையாடிவர
இன்னம்விளையாட வாரீரிளம்பிறையே. ௮

வட்டப்பூச்சிசாத்தி வயிரமுடன்கோடுசுத்தி
இட்டசிங்காதனத்தே யேர்க்கயிருந்தானே. ௯

கல்லைச்சிலையாக்கி கடியபுரமெரித்த
தில்லைச்சிதம்பரனே சிவகாமிநாயகனே. ௧௦

தழலேந்துஞ்சங்கரனே தாணுவோதாண்டவமோ
கழலேகதியென்று காட்டுஞ்சிதம்பரனே. ௧௧

வாளுடையகண்ணாள் வலவன்திருமகளார்
ஆளுடையநாயகிக்கி அன்பானநாயகனே. ௧௨

நீங்காதவாரு நிரம்பியதோர்நீர்மலத்தே
ஓங்காரந்தன்னில் வொதிங்கியவுத்தமனே ௧௩

சுந்தரசம்பந்தன் றதிக்கின்றசொற்கேட்டு
சிந்தைமகிழத் திருக்கண்மலர்ந்தானே. ௧௪

ஒருருவாயாதியா யுகந்துவருங்காலத்தே
நீருருவாய்நின்றருளும் நிர்மலனைச்சொன்னாரோ. ௧௫

வானவர்களெல்லோரும் வந்துதொழவம்பலத்தே
ஆனந்தமாகிநின்று ஆடுஞ்சிதம்பரனே. ௧௬

கங்கைமலர்மங்கை கமலமலர்பொற்பாதம்
செங்கைவருடத் திருக்கண்மலர்ந்தானே. ௧௭

மண்ணுலகும்விண்ணுலகும் வானோரும்வந்துதொழ
அண்ணம்பலத்தாடும் அனவரதத்தாண்டவனே. ௧௮

அன்றிருவர்தேட அழலுருவாய்நின்றருளி
மன்றுள்நடமாடும் மயேஸ்வரனைச்சொன்னாரோ. ௧௯

தேவாதிதேவனே தில்லைச்சிதம்பரனே
மூவாயிரத்தொருவர் ஆனமுழுமுதலே. ௨௦

பாலனெனுமார்க்கண்டன் பத்திதனைக்கண்டந்த
காலன்றனையுதைத்து கால்கள்சிவந்தானே. உக

பல்லாக்குச்சூழ்ந்த பரமசிவனன்னுட்டில்
எல்லாருங்காண யீயனெழுந்தானே. உஉ

எத்திசையுமெங்கும் ஏழைபங்கனென்றசொல்லி
முத்தமிழோர்வந்துதொழ முத்தியளித்தானே. உங

விண்ணிலுள்ளதேவர்களும் விஞ்சயர்களெல்லோரும்
மண்ணிலுள்ளோரீடேற மன்றுண்டிருந்தானே. உச

தில்லைமன்றுளாடி திரிபுரத்தைநீறுக்கி
அல்லல்பிறப்பறுக்கும் அனவரதத்தாண்டவனே. உரு

புழுகொழுகுமேனியனே புலித்தோலுடையானே
அழகுதில்லையம்பலத்தில் ஆடுஞ்சிதம்பரனே உசு

தில்லைச்சிதம்பரனே சிவகாமிநாயகனே
தொல்லைப்பிறப்பறுக்கும் சோதிதனைச்சொன்னுரோ. உஎ

ஈரேழுலகிலுள்ளோ ரெல்லோருமீடேற
காலெடுத்துநின்றுடும் கனகசபாபதியோ. உஅ

உம்பர்பெருமானே உமையாள்தன்னுயகனே
செம்பொன்மணிமன்றுள் ஆடுஞ்சிதம்பரனே. உகூ

அரிபிரமர்தேவர்களும் அரியாதமுப்புரத்தை
சித்தெரித்தசேவகனே தில்லைச்சிதம்பரனே. ங0

அன்புற்றசோதியாய் அரியபரவைக்குச்
செப்பொற்றுள்தாழச் சென்றசிதம்பரனே ஙக

செய்யவயல்சூழ் தில்லைச்சிதம்பரத்துள்
அய்யன்மலர்த்தாள்தூக்கி ஆடுஞ்சிதம்பரனே. ஙஉ

ஆணிப்பொன்னம்பலமும் அன்னைசிவகாமியுடன்
மாணிக்கமுதலியின்றன் மனேன்மணியுந்தான்வாழி. ஙங

சிற்றம்பலம்வாழ்க சிவகாமித்தான்வாழ்க
மற்றுமிராஜரத்னம் மறையோருந்தான்வாழ்க. ஙச

சிதம்பரத் தாலாட்டு

முற்றிற்று.

சிவமயம்.

அரிவானந்த தீபவிளக்கம்.

கண்ணிகள்.

க. நாள்போகுதே வீண் நாள்போகுதே - அய்யா
நாள்போகுதே வீண் நாள்போகுதே. நாள்

உ. காளைப்பருவத்திலேயிற் கன்னியர்வலைக்குட்சிக்கி
காமத்திலுலழிந்தி கர்த்தனை த்துதியாமலே. நாள்

ங. ஆத்திரத்தாற்பணங்காசை சேர்த்துசேர்த்துலகிற்கெட்ட
மூத்திரக்குழியிற்கொட்டநேத்திநேத்தியென்றுயெண்ணி.

ச. சரிகைகிரிகையோக ஞானவழியில்நின்று
நரிபரியாக்கிவைத்த நாதனைத்துதியாமலே நாள்

ரு. மாணிக்கவாசகற்கு மகிழ்ந்துவுபதேசித்ததால்
ஆணிப்பொன்னம்பலவன் அடியிணைப்பணியாமல். நாள்

சு. சத்திரஞ்சாவடிகட்டி சாதுக்களைப்பணியாமல்
சித்ரவிலைமாதர்களை சிங்காரித்துப்பார்த்துகொண்டு. நாள்

எ. பாடுபட்டுதேடியதோர் பணத்தைப்புதைத்துவைத்து
கூடுவிட்டுஆவிபோனல் கூடவருமென்றுயெண்ணி. நாள்

அ. இல்லறத்தைப்பெரிதென் றிருந்ததிலேவாழாமல்
தொல்லையென்றுவிட்டுவிட்டுதுறவியாய்கெட்டலைந்து. நாள்

கூ. தேவாலயங்கள்தோரும் தேடியதனுட்சென்று
நாவால்துதிசெய்யாமல் நாரிகளைநம்பிநம்பி. நாள்

கO. தந்தையாய்முதலானோரை தாரணியிற்றுதியாமல்
வந்தமட்டும்வாயினலே வம்புகளைப்பேசிக்கொண்டு. நாள்

கக. பத்தன்ராஜரத்தினம்நான் பாழ்மனதுக்கேயுரைத்த
புத்திகளைக்கேளாமல் பூவுலகைநம்பிநம்பி
நாள்போகுதே வீண்
நாள்போகுதே வீண்அய்யே

அரிவானந்த தீபவளக்கம்
முற்றிற்று.

சிவமயம்.

நடராஜர் பேரில்
ஸ்தோத்திரம்.

—0✱0—

இராகம் - இங்கிலீஷ் நோட்

பல்லவி.

க. சிதம்பரந்தனில்வாழ்நடரா ஜா
சிவகாமிமகிழ்மகரா ஜா

உ. பதஞ்சலிமாமுனிதுதிநா தா
பக்தற்கருள்தருமலர்பா தா

ங. ஏகபராபரமானவ னே
யெங்குநிறைந்தகிருபாகர னே

ச. திங்களுங்கங்கையுந்தரித்தவ னே
தில்லைமூவாயிரவர்பூஜித னே

ரு. காமனையெரித்தக்கண்ணனுடையவ னே
காலனைக்காலாலுதைத்தவ னே

சா. ஆதியுமந்தமுமானவ னே
ஆயனுக்காழியைதந்தவ னே

எ. நாரிக்கிடபாகந்தந்தவ னே
நான்முகன்முடிதேடவளர்ந்தவ னே

அ. நரிபரியாகவேசெய்தவ னே
நாரணன் அடிதேடவளர்ந்தவ னே

கூ. ஆலகாலவிடமுண்டவ னே
ஆடுஞ்சிதம்பரத்தாண்டவ னே

கo. ராஜராஜர்துதிகொள்பவ னே
ராஜரத்னங்குறைதீர்ப்பவ னே

சிதம்பரந்தனில்வாழ்நடரா ஜா
சிவகாமிமகிழ்மகரா ஜா

நடராஜர்ஸ்தோத்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்

நடராஜர்கீர்த்தனை,

——(*)——

பல்லவி.

நம்பிக்கெட்டவருண்டோ நடராஜனை
நம்பிக்கெட்டவருண்டோ

அநுபல்லவி.

நம்பிகெட்டவருண்டோ நாதாநாதாக்களிலும்
அம்புவிமுதல்படி அளக்கும் அரிமுதலாய் நம்பி

சரணங்கள்.

க. நந்தனுக்கருள்கொடுத்தார் நற்கதிபெற
நால்வர்க்குபதேசித்தார்
சுந்தரர்சம்பந்தர் மாணிக்கவாசகர்க்கும்
பந்தமறஅப்பர்க்கும் பதவிகொடுத்தவனை நம்பி

உ. சிறுத்தொண்டநிடமாக திருவருள்
சித்தனுருவாய்வந்து
குறித்தசிராளன்கரி சமைக்கச்செய்தவருடன்
பரித்துநால்வருக்கும் பதவிகொடுத்தவனை நம்பி

ந. அடியாரிடர்தீர்க்குந் தில்லை
ஆனந்தத் தாண்டவனை
படிமீதினில்ராஜ ரத்தினந்துதிதனை
பாடிப்படித்துநிதம் பக்தியாய்துதிசெய்து நம்பி

நம்பிக்கெட்டவருண்டோ நடராஜனை
நம்பிக்கெட்டவருண்டோ

நடராஜர் - கீர்த்தனை
முற்றிற்று.

———

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள்
திருநாவுக்கரசு சுவாமிகள்
சுந்தரமூர்த்திசுவாமிகள்
மாணிக்கவாசக சுவாமிகள்

இச்சைவ சமையாசாரியர்கள்

நால்வர் தாலாட்டு

காப்பு.

மால்வணங்கிப்போற்று மழவுடையான்வண்புகழ்தேர்
நால்வரருட்டாலாட்டு நானியம்ப—நூல்வழியிற்
சந்ததமுஞ்சிந்தைசெயுந் தண்டையுணைசெஞ்சரணக்
கந்தமததந்திமுகன் காப்பு.

ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள்.

கம்பந்தவாதமாயாக்காதல்கொள மணப்பேய்கள்
வெம்பந்தக்களைகணீங்க வியன்சைவப்பயிர்தழைக்க
நம்பந்தரங்கபத்தி நாடுவோர்க்கருளுஞான
சம்பந்தப்பிள்ளையார்தஞ் சரணிதமுடிமேற்கொள்வாம்

ஆராரோ - ஆராரோ
ஆராரோ - ஆராரோ

மஞ்சுறங்குநீள்புரிசை மாகாழிக்கவுணியர்தம்
மிஞ்சுகுலசிவபாத விருதயர்தங்கண்மணியோ. க

ஆயிழையார்பல்லோருள் அன்புநிறை நாயகமாம்
தாயெனவேபகவதியார்தமைக்கொண்டவிண்மணியோ உ

மேலாஞ்சிவபாத விருதயர்நீராடுகையில்
நாலாரணந்துதிக்கு நாயகிபாலுண்டவனே. ௩

உண்டவமுதுகண் டேட்டினவரார்கொளெனப்
பண்டையொளியைச்சுட்டிப் பன்னுந்தவமுதலோ. ௪

வேதங்கடந்தவனை விண்ணோர்களேத்துதமிழ்
வேதந்தனிலே விளக்கவந்தமெய்ப்பேறே. ௫

கொல்லோமோர்சிற்றுயிருங்கொல்வமடியாரையென்றும்
வெல்வோமென்றெண்ணமணர் வேர்களையுங்கோளரியோ ௬

நற்றாமரைக்கரத்தில் நம்பனருளாலிரண்டு
பொற்றாளம்பெற்றவன்றன் புகழ்பாடும்புண்ணியனே ௭

எண்டிசையும்புகழ்ந்தேத்துமெழில்விளங்கு மோர்தாளத்
தண்டிசையிற்றானமர்ந்து தமிழோதுதற்பரனே. ௮

அன்புவளர்மாமயிலை யணிவணிகர்குலமாதி
னென்புவளர்பெண்ணுருவா யியங்கவருநல்கினனே ௯

மறைநான்கும்பூசித்த மறைக்காட்டிற்கதவுதமிழ்
மறைப்பாடியடைப்பித்தமறைஞானக்கண்மணியோ. ௰

இப்படியிற்கூன்மாரனெய்துசுரவெப்புமவ
வெப்புமொழித்தருள்காழி விரகனெனும்விஞ்சையனே ௧௧

அருஞானமாருயிர்கட் களிக்கவுலகினிலுதித்து
திருஞானசம்பந்தச்சீர்பேர்கொள் சின்மயனே. ௧௨

ஸ்ரீசம்பந்தாயநம:

ஸ்ரீசம்பந்த சுவாமிகள் தாலாட்டு.

முற்றிற்று.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அப்பராவணியும்வேணி யரனடியகத்துளேதோ
யப்பராவிப்பணிந்தைந் தெழுத்தினலல்லையீந்தி
யப்பராவமுதமேய்ப்ப வருளுருவானவெங்க
ளப்பராஞானமூர்த்தி யடிகளையகத்துள்வைப்பாம்.

அன்றுமறைபூசித்தேயடைத்தகதவுந்திறக்கத்
துன்றுசுவைதமிழ்மறையைச் சொன்னவருட்கடலோ. க

ஆவலொடுசீர்காழி யண்ணல்சிவிகைசுமந்தே
யேவலரைவினவ ஈங்குற்றேனென்றவனே. உ

இன்பருளும்பைஞ்ஞீலி யெழிபதியிற்கட்டமுத
மன்பர்களுக்கருளரனு லடைந்தபரமாற்புதனே. ங

ஈனமிலாவரமாத ரெழிலாகுமிருளையருண்
ஞானவொளியால்வென்று நாதனருள்பெற்றவனே ச

உண்மாசுகழிப்பதரா ணெஞ்சைவவிரதமெனக்
கண்மாசுபடுமவுனக்கழுதுகட்குத் தெரித்தவனே. ரு

ஊனதனிலொளித்துறையு மொருவனையேயுள்கிவிடம்
வானமிர்தமெனமகிழ்ந்து வாய்மடுத்துண்டிருந்தவனே சு

எண்ணரிசபணர்கடலிட்டகற்றூண் மிதந்திடவெண்
கண்ணவறைதடமாகச் சுகமுற்றுமீண்டவனே. எ

ஏதமுறுமமணர்களா லேவியவெங்கரியதனை
நாதனருட்பண்பாடி நாணவைத்தநாயகமோ. அ

ஐயனெனத்துதிசெய்யப்பூதி சேயைமுனம்
வையமிசைவரவழைத்த வான்புகழூநற்றவனே. கூ

ஒண்ணகைசேர்திலதவதியுடன்றோன்றிச் சூலைகெடப்
பண்ணிற் " கூற்றாயினவா " பாடுசிவ பாக்கியனே. க0

ஓங்கலிலாவமண்சமயத் துட்கிடையையறிவிப்பான்
தீங்கில்மருணீக்கியராந் திருநாமம்பெற்றவனே. கக
ஔவியமில்திருநாவுக் கரசரெனுநாமத்தைச்
செவ்விதாய்த்துதிசெய்யிற் சித்தியெலாந்தருவானே கஉ

ஸ்ரீவாகீசாயநம:

திருநாவுக்கரசுசுவாமிகள் தாலாட்டு

முற்றிற்று.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கந்தரக்கறையுளான்றன் கருணையாற்கராமுன்னுண்டே
அந்தரஞ்சென்றமைந்த னுருயிரழைத்துநல்லி
தந்தரத்தமிழ்பாண்டித் தலைமைபெற்றுயர்ந்தஞானச்
சுந்தரமூர்த்தியார்தன் துணையடி துதித்துவாழ்வாம்.

அரனடிக்கணன்புற்றோ ரனைவர்களுஞ்சீர்தூக்குந்
திரமுடையவிசைஞானி செய்தவமாய்வந்தவனே. (க)
அன்புடனேயுச்சியையமோந்-தணைத்துகந்தெனப்பாவென
றின்புடையசடையனு-ரேத்தவந்தவெழின்மணியோ (உ)
அய்யரடிப்பெருமையினு-லருளுருவமாய்வந்த
துய்யசடங்கவிமகடான்-துணைவியென வந்தவனே. (ங)
அறியவொண்ணுவமலருமே யம்மணத்தில்வந்துமுன்னுண்
முறியோலைகாட்டவவர் முற்பேரைத்தொடுத்தவனே (ச)
அகிலமதிலந்தணர்க ளந்தணர்க்காளாதலெந்த
விகிதத்துமொவ்வாதோய்-விப்பரனேயென்றவனே (ரு)
அவனியிலில்லாவார்த்தையறைந்தனையே'பித்தா'வென்
றவனுறையும் வெண்ணெய்நல்லூர்க் கருட்பதிகஞ் சொன்ன
[வனே. (சு)

அரனளித்தவரும்பொருள்க ளனைத்தையுமாற்றிட்டுநன்னீர்
பரவியதோர்தடத்தெடுத்த பாக்கிய சிகாமணியோ (எ)

அங்கையில்மான்மழுவேந்து மரன்றனையே பரவையெனும்
மங்கைபாற்றூதனுப்பும் மாண்பறிந்தமன்னவனே (அ)

அங்கமோ பூ றநுவ லங்கணனைப்பாடி மண்ணுஞ்
செங்கறனைப்பொன்னுனகச் செய்யவல்லதிண்ணியனே. (கூ)

அருமறைசொல்குண்டையீ ரானருளுமரிகுற்றப்
பெருமைமிகுபூதகணம் பெற்றவருட்பெருந்தகையோ (கO)

அம்புவியாள்சேரனும்வெள் ளானைமீதூர்ந்துவரத்
தும்புருநாரதர்போற்றித் தொழுங்கையிலை கண்டவனே (கக)

அண்டர்களேத்தித்துதியைந்தக்கரத்தானன்பொடுவன்
றொண்டனெனச்சொன்னதோடுசுந்தரப்பேர்பூண்டவனே. (கஉ)

(ஸ்ரீ சுந்தராயநம:)

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாலாட்டு
முற்றிற்று.

183880.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

பரணித்தலின்றி வெள்வேற்பாண்டிய னளித்தபொன்னால்
வேணிக்கண்வேணிவைத்த விமலனற்புதவதீத
ஆணிகனகமன்றுடுமய்யா மந்திரமமைத்த
மாணிக்கவாசகக்கோன்மலரடி சென்னிவைப்பாம்.

கண்மணியினெளிபோலிக் கடலுலகெலாங்களிப்ப
விண்மணியாகியஞான விழியழிக்கும்வித்தகனே (க)

கானநவில்குருந்தடிக்கீழ்க் கண்ணுதல்மெய்ச்சிவஞான
மோனமாம் பரம்பொருள்சீர் மொழியப்பெற்றுய்ந்தவனே (உ)

கிள்ளைகள்பண்செய்மதுரைக் கீர்த்திமிக்கபாண்டியனால்
வெள்ளைமதிச்சடையனடி மேவச்செய்வித்தகனே. (ந)

சேதமிகுமெழில்மதுரைக் கேடிலாக்கோமாற்காய்
ஏதமிலாநரிபரியா யிசையவருள்பெற்றவனே. (ச)

குற்றமிகும்பவுத்தர்கன்முன் கொற்றவன்றன் மூகைப்
உற்றரனார்சீர்பாட வுவந்தருளுமருந்தவனே. பெண்

கூறரியசைவத்தின் கோட்பாட்டை நிந்திக்கு
மாறறிந்தபுத்தர்களை வாதில்வென்றவண்மையனே. (ரு)

கெடுதலிலாவருளரனார் கிருபையுடனேடெழுதப்
படுநலஞ்சேர்திருக்கோவை பாடியசற்பாத்திரனே. (எ)

கேள்விமிகுமறிஞர்களால் கிளர்நான்குமறையோதி
வேள்விசெயுமந்தணரால் வியந்துதொழுமேலவனே. (அ)

கையிலாமலகமெனக் கற்றவர்கள்களிகூரப்
பொய்யிலாமறைதமிழில் புகன்றபெரும்புங்கவனே. (சு)

கொண்டலென வுயுர்கள்களி கொள்வுயர் ஞானநெறி
மண்டலத்திற் றெளிந்துயச்சீர்-வாசகத்தைப் பொழிந்தவனே

கோதிறிரு வாதவூர்க்-கோனெனு நாமத்தொடுமை
மாதிறைவன் பாதத்தை-மறவாத மாமணியே. (கக)

கௌவைபுரி புத்தர்மதங்-களைந்திதழியொண்பிறையான்
எவ்வமில சீர்நிலைநிறுத்து-மிணையிலா வாசகனே. (கஉ)

ஸ்ரீ மாணிக்கவாசகனேநம:

நால்வர் தாலாட்டு

முற்றிற்று.

உ

பராசத்திதுணை.

மதுரை

மீனாக்ஷியம்மன் தாலாட்டு.

தென்கூடலங்கயற்கண் தெள்ளமுதைத்தாலாட்ட
மின்கோட்டுசித்தி விநாயகன்றாள்காப்பாமே
முன்னாள்மானிதர் முனிவர்களுமீடேறத்
தென்னன்மகடாகவந்த செல்வியெனச்சொன்னாரோ
மலையத்துவச வழுதிமாவேள்விதனிற்
சிலைநுதற்பெண்ணாகவந்த தேவியெனச்சொன்னாரோ
பாலவயதிற் பாண்டியநன்னாட்டை
மாலைமுடிசூடி வாழ்விக்கவந்தவளோ
ஈன்றுதரிக்குமியற்கையாற்றென்மதுரைத்
தோன்றல்மகளாகியிந்த தொல்லுலகையாண்டவளோ
அன்னியதேசத்தரசரெலாங் கப்பமிடக்
கன்னியரசாயுலகைக் காவல்புரிந்தவளோ
தேவர்க்கரசைச் செயித்துபலநிதியுங்
காவளங்களெல்லாங் கைப்பற்றிவந்தவளோ
திக்குவிஜயஞ் செலுத்தித்திசையேழும்
ஒக்கவணங்க உயர்திறைகொணர்ந்தவளோ
வெள்ளிமலைசென்று விடையோனைக்கண்டவுடன்
வெட்கித்தலைகுனிந்த மீனம்பிகைதானோ
எந்தைசுந்தரேஸ்வரர்முன் னிசைந்தபடியேயவர்தன்
சிந்தைமகிழ்ந்துமணஞ் செய்துகொண்ட பெண்ணரசோ
தாயார்தான்மூழ்கச் சத்தசமுத்திரத்தை
நாயகர்பாற்சொல்லி நகரில்வரச்செய்தவளோ
தாயாருடன்மூழ்கத் தந்தையைவிமானமுடன்
சேயுலகைவிட்டுத் திரும்பிவரச்செய்தவளோ

பொன்மாலைதன்மகளாய்ப் புகழ்மாலைபூண்வினிய
சொன்மாலைமெய்யடியார் சூட்டப்புனைந்தவளோ
இக்குவலயத்தை யிகழின்றியாள்வதற்கே
யுக்ரகுமாரனென உயர்குகனைத்தந்தவளோ
தேவர்முனிவரொடு சித்தர்வித்தியாதரரும்
ஆவலுடன்பணியு மம்மையிவள்தானோ
குரகத ஆனனத்தாள் கூடப்பிறந்தசெழும்
மரகதவல்லியென வந்துதித்தவாரமுதோ
மன்னுஞ்சராசரங்கள் வரம்பின்றிப்பெற்றளித்தும்
என்னாளுங்கன்னியென விருக்குமிளங்கொடியோ
துரியாரிடையாளோ சுகத்தின் மொழியாளோ
அடியாள்வினையகற்று மருள்நிறைந்தகண்ணாளோ
நாமகளைத்தேவர் நாட்டுக்குயர்மகளை
மாமகளையேவல்கொளும் வழுதிதிருமகளோ
போந்தவுயிர்க்கெல்லாந்தாம் பொதுவென்பதையுணர்த்த
சாந்தநாரைக்குமுத்தீ தந்தோனைச்சார்ந்தவளோ
சருவவுயிரைந்தெழுத்தை சாற்றுவதுநீதியென்றே
கருக்குருவிக்குபதேசங் கற்பிக்கச்சொன்னவளோ
எல்லாவுயிர்க்குந்தா யென்றுமறையோலமிட
நல்லாள்பொன்மாலை நன்மகளாய்வந்தவளோ
வந்தவளோகாழிநகர் வள்ளலுக்குஞானமுதந்
தந்தவளோவேதத் தலையின்னடிப்பவளோ
பச்சைக்கிளியோ படர்ந்தசுடரொளியோ
நச்சரவ.ர்பூண்டபர னாரிடத்தமர்ந்தவளோ
கண்ணின்மணியோ கற்பகத்தின்செந்தேனோ
வண்ணக்குயிலோ மாதங்கள்மாதரசோ
பொன்னிவளநாடன் புகழ்மலையநாட்டரசன்
இன்னும்பலபேர்கடொழ விருந்தரசுசெய்தவளோ

கல்லானைத்தானருந்தக் கரும்பளித்தவல்லாந்தன்
வல்லசித்தர்தன்னை மணம்புணர்ந்து கொண்டவளோ
அந்தணர்கள் போற்று மாரணத்தின்மெய்ப்பொருளோ
பந்தவினையகற்றும் பரமதயாநிதியோ
பொய்யறும்மெய்யன்பரகம் போந்துகுடிகொண்டவளஞ்
செய்சூழ்மதுரைநகர் சிறக்கவந்தபேரரசோ
ஆளியின்வாகனமீ தமர்ந்தேவருபவளோ
காளிதாசர்க்கருளுங் கருணைச்செங்கடலோ
இப்புவியில்மீனுட்சி யின்பேரில்தாலாட்டை
முப்பதுங்கற்றவர்கள் மூவுலகையாள்வாரே.

மீனுட்சியம்மன் தாலாட்டு
முற்றிற்று.

உ
பராசத்திதுணை.

மதுரை மீனுக்ஷியம்மன்

ஊஞ்சற்பாட்டு.

பசும் பொன்னின் குவியல்களை யுலகிற்காய்ச்சி
பக்குவக்கட்டளையிலிட்டுச் செங்கலாக்கித்
தசும்புநிகர் முத்தினத்தைச் சுண்ணஞ்செய்து
சமைத்ததொருவிசித்ரப்பொன் மண்டபத்தில்
விசும்பிலுள விஸ்வகர்மா நிர்மித்திட
விளங்குநவமணியூசல் மிசைவிண்ணோரும்
வசம்புரி யொண்ணுவுமையே யாடீரூசல்
மதுரைமீனுட்சியம்மையாடீரூசல். (க)

வேலைசெய்த வயிரமணித்தூண்களாட்டி
விலைபெற்ற மாணிக்கச்சட்டமாட்டிக்
கோலமரகதப்பலகை கொண்டுபூட்டிக்
குடங்கைநவமணிகளினால் வயங்கத்தீட்டிச்
சாலவேபருமுத்தின் சரங்கள்சூட்டி
தமனியச்சங்கிலி வடந்தொட்டறமாதாட்ட
மாலைமனோன்மணி யெந்தாயாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (௨)

விண்ணுலகமாதர்வந்து புட்பஞ்சூட்ட
விஞ்சையர்கண் மடமாதர் வீணைமீட்ட
கண்ணிபுனை புலோமிசை சாளாஞ்சிரீட்டக்
காசினியின்மாதர்பல விநோதங்காட்டப்
பண்ணரியபலவாத்ய கோஷ்டமீட்டப்
பாமாதும் பூமாதும் வடந்தொட்டாட்ட
வண்ணமரகதவல்லி யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (௩)

அலைகடல்சூழ் புவியரசர் தம்மின்மூன்றெண்
ணரசருக்குள் சிறந்துசிவதொண்டுபூண்டு
கலைமதியின்மரபில்வந்த வேந்தருக்குள்
கலைபயின்று முடிபுனைந்து உலகின்மீது
கலியிருளைப் பகையிருளைக் களைந்துநாளும்
கற்பகக்காவிந்திரனே யுவமைகூறும்
மலையரசன்றவமணித்தா யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல் (௪)

திங்களிடமுதித்ததோ ருயர்ந்தமுத்துஞ்
சிந்தூரத்தினிடத்துதித்த ஆணிமுத்தும்
நங்கையர்கண் கண்டத்தி லுதித்தமுத்தும்
நாகத்தினிடமுதித்து வயங்குமுத்துஞ்

செங்கரும்பினிட முதித்துச் சிறந்தமுத்துஞ்
சேர்ந்தவடம் பலமதிபோற்றலங்கமார்பில்
மங்களஞ்சேர் பெண்ணரசி யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (ரு)

பட்டிசைந்த யிடைதனிலொட்யாணமின்ன
பானுநிகர் வயிரமூக்குத்திமின்ன
மட்டில்லா விலையுயர்ந்த பணிகள் துன்ன
மாணிக்கவோலைகாதணிகள் சொர்னக்
கட்டிசைந்த வைகளையும் கொலுசுமோங்கக்
கண்டவர்கள் துயர்பாசக் கட்டுநீங்க
மட்டுவார் குழலுமையே யாடீரூசல்.
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (சா)

பாரதிநல்யாழ்மீட்டிப் பாடத்தேவப்
பரத்தையர்நால்வரும் பரதப்படியேயாட
தீரமுடன்மூவாசை துறந்தோர்வந்து
திருக்கோலங்கண்டானந் தங்கொண்டாட
வாரணிந்தகுவிமுலைக்காந் தருவமாதர்
வணங்கிநின்றேவல்செய்ய வைகும்ஞான
வாரிதியேமறைப்பொருளே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (எ)

மூவுலகத்துயிரனைத்தும் ஈன்றென்னாளும்
முற்றாதகுயர்ச்சிறுபெண் ணாக்கிகூடற்
காவலன்றன்மகளாகி ராஜநீதி
காட்டிடவே முடிபுனைந்து கடுக்கைவேணித்
தேவனைநன்மணம்புரிந்தே யில்லரத்தின்
செயலிதுவென் றுலகத்தோர் தேரச்செய்த
மாவுலகநற்றாயே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மையாடீரூசல். (அ)

வாசமலர்கலவைமண மெங்கும்வீச
வண்ணலட்சங் கன்னியர்கள் மருங்கேசூழ
ஆசின்மறைமுடிமேவுஞ் சுயம்பிரகாச
வரும்பொருளே யெனவேதன் மாலோர்பேச
பாசயமனெப்பொழுதுங் கண்டுகூச
பழவடியாருளமலரிற் பதியும்நேச
மாசில்லாவருட்கடலே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (௯)

வேதாகமங்கலைகள் விண்ணும்வாழ்க
விபுதர்முனிகணங்களுடன் விரிஞ்சன்வாழ்க
நாதாந்தங்கடந்துநின்ற சோதிவாழ்க
நானிலஞ்சேர் சிவனடியார் கூட்டம்வாழ்க
ஆதாரம்நீயென்று பாதம்போற்றும்
அடியார்க்குக்கிருபைசெய்ய வரநீயென்று
வாதாடும் பசுங்கிளியே யாடீரூசல். (௧0)

மதுரை மீனாக்ஷியம்மன் ஊஞ்சற்பாட்டு
முற்றிற்று.

——

உ

சிவமயம்

செல்வக் குழந்தைகள்,

திருத்தாலாட்டு

விநாயகர் துதி.

வெண்பா.

ஓராட்டெடுத்த வுலகோரெல்லா முரைக்குத்
தாராட்டையான் றமிழிற்சாற்றநிதஞ்-சீராட்டி
மாதுமையாள் பெற்றமத வாரணத்தின்பொற்கமலப்
பாதமல ராலருச்சிப் பாம்.

தாலாட்டு.

பாலும் பழமும் விநாயகர்க்குப்
பச்சரிசி யெள்ளுருண்டை
நாலுவிதமும் படைத்தே உங்களையா
நானிலத்திற் பெற்ற கண்ணே. 1

செவ்வேளை யீஸ்பரனை யென்னையா
தேவிசிவ காமிதனை
வெவ்வேளை யும்போற்றி-யுங்களையா
ஈன்றெடுத்த ரத்தினமோ. 2

தென்னர்குரு வாசாரி நல்விருதூர்த்
தேசிகபொன் னம்பலவன்
தன்னருளினாலே யென்னையா நீ
தாரணியில் வந்த கண்ணே. 3

தருமதுரை யுங்களையா பாதையிலே
சத்திரங்க ளுண்டு பண்ணி

திருமடநந் தாவனங்கள் உங்களையா
செய்துபெற்ற தெள்ளமுதோ. 4

ஆடியமா வாசையிலே உங்களையா
ஆயிரம்பேர்க் கன்னமிட்டு
தேடியதோர் புண்ணியத்தால் என்னையா நீ
செல்வமாய் வந்த கண்ணே. 5

தையமா வாசையிலே உன்னைப் பெற்றோர்
தனுக்கோடி நீராடிப்
பையரவா சாந்திசெய்ய என்னையா நீ
பாலகனாய் வந்தாயோ. 6

கொம்புக் கனியோ என்னையா நீ
கோதுபடா மாங்கனியோ
வம்புக் கழுதாயோ என்னையா நீ
வாயெல்லாந் தேனூற. 7

அன்னக் கொடிகட்டி
அசையா மணியுங் கட்டிச்
சொர்னக் கொடிகட்டித்
துலங்கவந்த ரத்தினமோ. 8

சந்திரகாந்த மேடையிலே
தருமர்கதை கேட்கையிலே
சந்திரகாந்த நல்லொளிபோல்
தளதளென வந்தாயோ. 9

கங்கைநதி நீராடி
காசிவிஸ்வ நாதரையுஞ்
செங்கையி னாலேயிறைஞ்ச
செல்வமாய் வந்தாயோ. 10

வாடியே நாளெல்லாம்
வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தன்னில்
செல்வமாய் வந்தகண்ணே. 11

மத்திக்காய் கொண்டு
மலர்ந்த சிமிக்கிகொண்டு
பத்தியாய்க் காதுகுத்த
பாக்கியவான் வாரார்கள். 12

மலடி மலடியென்று
வையகத்தோ ரேசாமல்
மலடியென்ற சொல்லை
மாற்றப் பிறந்தாயோ. 13

வேம்பரசைச் சுற்றி
விநாயகனைத் தெண்டனிட்டு
சாம்பசிவன் பூசைபண்ணித்
தாரணியிற் பெற்றகண்ணே. 14

நாசப்பிர திஷ்டைசெய்து
நாள்தோறும் பூசைபண்ணித்
தாகமாய்ப் பெற்ற
தவமணியும் நீதானே, 15

தேவர் வணங்குந்
திருமாலை யீஸ்வரனைப்
பூவெடுத்துப் பூசைபண்ணும்
புண்ணியத்தால் வந்தாயோ. 16

சென்னைக் கவர்னர்மெச்சுஞ்
சீமானர் உங்களம்மான்

கன்னப் பணிதிகொண்டு
காதுகுத்த வாரார்கள். 17

மிக்கவருட் சொக்கேசர்
மீனாட்சி பெற்றெடுத்த
உக்கிரவீர பாண்டியனாய்
உலகாள வந்தாயோ. 18

செல்வந் தழைக்கச்
செகமேழுந் தான்றழைக்கக்
கல்வி தழைக்கவந்த
கண்மணியும் நீதானோ. 19

அட்டதிசை வேந்த
ரடிபணிந்து போற்றிசெய்யப்
பட்டம் புனைந்தேழு
பாராள வந்த கண்ணே. 20

வெள்ளிக் கிழமை
விரத மகத்துவத்தால்
பிள்ளைக் கலிதீர்க்கப்
பிறந்த நவரசமோ. 21

பச்சைப் பனையோலை
பசும்பொன் னெழுத்தாணி
இச்சையாய்க் கைக்கொண்
டெழுதப் பிறந்தாயோ. 22

எங்கள்குல மங்காமல்
எதிர்த்தகுல மேசாமல்
தங்கமணிப் பொக்கிஷத்தை
தானாள வந்தகண்ணே. 23

கோட்டையுங் கொத்தளமுங்
கோபுரமுஞ் சூழ்ந்திலங்கு
நாட்டையா சாட்சிசெய்ய
நானிலத்தில் வந்தகண்ணே. 24

கன்னின்சிறு சதங்கை
காலிலழுத்து மென்று
பொன்னுற் சிறுசதங்கை
பூட்டிவிட்டா ருங்களம்மான். 25

அந்திசந்தி யீஸ்வரனை
யன்பாகப் பூசைபண்ணி
வந்தித்துப் பெற்றெடுத்த
மாமணியே கண்வளராய். 26

தென்னவர்கள் தன்மரபு
செழிக்கத் தினந்தோறும்
மன்னவர்கள் போற்ற
வந்துதித்த ரத்தினமோ. 27

எங்கோன் சிவபரனை
யேத்தி யுலகாண்டு
செங்கோல் பிடிக்கவந்த
செல்வமே கண்வளராய் 28

கல்விக் களஞ்சியமே
கற்றோர்க்குத் தாயகமே
செல்வத் திருவிளக்கே
சீமானே கண்தூங்கு. 29

எத்தலமும் போற்றும்
எஜமானும் உங்களம்மான்

கைத்ததலத்தி லேந்திக்
காதுகுத்த வாரார்கள். 30

காவேரிநீரோடி வந்து
காளகண்டனைப்பணிந்து
பூவெடுத்துப் பூசைபண்ணும்
புண்ணியவான் பெற்றகண்ணே. 31

வேதம் பலவும்
விளங்குபல சாஸ்திரமும்
ஓதியுணரா
துணரவந்த ரத்தினமோ. 32

துத்திப்பூச் சல்லடமுஞ்
சொர்னமணிப் பூஷணங்க
ளத்தனையுங் கொண்டுநம
தம்மான்மார் வாரார்கள். 33

வாடாமல் சற்றும்
வருந்தித் தயங்காமல்
தேடாமல் வந்துதித்த
செல்வக் களஞ்சியமோ. 34

தில்லைவனங்காசி
திருவருணை குற்றாலம்
எல்லாம் பணிந்தேத்தி
யீன்றெடுத்த பாக்கியமோ. 35

ஜில்லாக் கலெக்டர்
தேசத்து மன்னவர்கள்
எல்லாரும் போற்றவந்த
ஏகசக்க ராதிபனே. 36

கையிலிற் கெடுத்துக்
காசினீயி னீதிநெறிப்
பைச லெழுதவந்த
பாக்கியமு நீதானே. 37

பம்பாய் கல்தத்தா
பலதேச வர்த்தகத்தால்
செம்பொனிதி தேடவந்த
செல்வக் களஞ்சியமோ. 38

நான்கு திருமறைவும்
நாலேழு ஆகமமுந்
தேன்போல மொழியவந்த
தெய்வகுலத் தெள்ளமுதோ. 39

தேனே தெவிட்டாத
தெள்ளமுதே செங்கரும்பே
கோனே யரசகுலக்
கோமானே கண்வளராய். 40

மாமணியே மாமலரே
மாமலரில் வாழ்ந்திருவே
கோமணியே ராச
குலக்கொழுந்தே கண்வளராய் 41

கன்னல் விளைந்து
கனுகக்களிலே முத்துதிரப்
பொன்னி நதிபாயும்
பூமான் மருமகனே 42

எல்லையளந்து முன்னா
ளிராவணனைச் சங்கரித்துக்

கல்லைப்பெண் ணாக்கிவைத்த
கண்ணன் மருமகனே. 43

வாசமருக் கொழுந்து
வடுவில்லா ராசமணி
ராசமணி பெற்றெடுத்த
ராசதுரை யுங்களம்மான் 44

வெள்ளிச்சிறு சதங்கை
விலைமதியா வீரதண்வட
அள்ளிக்கொடுத்து விட்டான்
அர்ச்சுனனு முங்களம்மான் 45

சோதி வயிரமணி
துளையில்லா நாகமணி
ராதிபவளமணி
தங்கமணியுங்களம்மான் 46

தங்கக் கலசம்வைத்த
சாரட்டு வண்டியின்மேல்
சிங்கம்போ லேறிவருஞ்
சீமானும் உங்களம்மான். 47

தென்னை யெலுமிச்சை
தெவிட்டாக் கொழுமிச்சி
புன்னைமரந் தோப்புவைத்த
பூமான் மருமகனே. 48

கோடிக்கிங் கோடி
குறையாப் பணந்தேடி
கோடிக் கொடிகள் கட்டுங்
கொற்றவனு முங்களம்மான். 49

மாயமா னோட
வலுவேகமா யோடி
மாயமானெய்து கொன்ற
மன்னன் மருமகனோ. 50

பட்டத்து மன்னன்
பாராளுஞ் சக்கரவர்த்தி
சட்டமுடன் பெற்ற
தவமுதலே கண்வளர்ராய். 51

மாணிக்கத் தாணோ
மணிவயிரப் பூமுடியேர
ஆணிக்கனக முத்தோ
ஆபரணப் பொக்கிஷமோ. 52

சீன மலையாள
தேசப்ரியந்த மெல்லாந்
தானாள வந்துதித்த
சந்திரகுலக் கண்மணியோ. 53

பூரணகுப்பம் வைத்துப்
பொன்னால் விளக்கேற்றித்
தாரணியிலே நெடுநாள்
தவமிருந்து பெற்றகண்ணோ. 54

முன்னோர்க ளாண்ட
மூவாறு பட்டணமுந்
தன்னா லரசாளத்
தவம்பெற்று வந்தாயோ 55

காசிவிசு வேசருக்குக்
கைநிறையப் பூவெடுத்துப்

பூசைபண்ணிப் பெற்றெடுத்த
புண்ணியமு நீதானோ. 56

சேனைதளஞ் சூழ்ந்துவரக்
செண்டாச் சுருட்டிவர
ஆனையின் மேலேறிவரு
மாதித்தன் பெற்றகண்ணே 57

நித்தியமு மம்பிகைக்கு
நெய்வார்த்துத் தீபமிட்டுப்
பத்திசெய்து பெற்றெடுத்த
பாக்கியமே கண்ணுறங்கு. 58

மர்மதுரை மீனாட்சி
மகமாயி கோவிலுக்கு
மாவிளக்குக் கொண்டு
வலம்வந்து பெற்றகண்ணே. 59

பாட்டனா ராண்ட
பதினெட்டு ராச்சியமும்
நாட்டமுட னாளவந்த
ராசகுல நாயகமோ 60

அங்கயற்கண் மீனாட்சி
யம்பிகையின் கோவிலுக்குப்
பங்கயநூல் தீபமிட்டுப்
பாக்கியமாய்ப் பெற்றகண்ணே. 61

வெள்ளைக் குதிரைகட்டி
விலைமதியா வண்டிகட்டி
வெள்ளைக்காரத் துரையை
வேலைகொள்வார் பெற்றகண்ணே 62

புள்ளிமயில் வேலவர்க்குப்
பூவெடுத்துப் பூசைபண்ணி
அள்ளியன்ன மீந்துபெற்ற
ஆசைத் திருவிளக்கோ. 63

கூடலழகருக்குக்
கோடிபணங் கொண்டுவந்து
பாடலுடன் பூசைபண்ணும்
பாக்கியவான் பெற்றகண்ணே. 46

சைவா கமங்களெல்லாஞ்
சங்கையற வேடித்துத்
தெய்வா குதிபுரியுஞ்
சீமான் பயந்தகண்ணே. 65

காந்திமதி கோவிலுக்குக்
காணிக்கை கொண்டுவந்து
சாந்திசெய்துபெற்ற
தவமுதலே கண்வளராய். 66

வில்லிலே வல்லவனைப்
மேதினி யெல்லாமறிய
அல்லிதன்னை மாலையிட்ட
அர்ச்சுனனு நீதானே 67

தாசரதி யொத்தவுன்னைத்
தாரணியிற் பெற்றெடுக்க
ராசதுரை யுங்களையா
என்னதவஞ் செய்தாரோ 68

சொன்னமொழி பொய்க்காது
தூயவன நாடாண்ட

மன்ன னரிச்சந்திர
மகராச னீதானோ. 69

குலத்துயர்வு பெற்றமுடிக்
கோமான் சுயோதனற்குக்
கலத்தப்புழு மாற்றவந்த
கர்னமக ராஜாவோ. 70

புள்ளிமா னீன்றெடுத்த
பூவை குறக்குலத்து
வள்ளிதனை மாலையிட
வந்தவனு நீதானோ. 71

செம்புச் சிலையோ
சிவனுமையாள் பாலகனோ
அம்புவில்லீற் பூட்டு
மருச்சுனனார் பெற்றகண்ணோ. 72

செங்நெல் விளையச்
சிறுசம்பாப் போரேறக்
கன்னல் வளங்தோங்குங்
கன்னேசி நாட்டரசோ. 73

இசையான மன்னவர்க
ளெல்லோரும் வந்துதொழ
அசையா மணிகட்டி
யாளவந்த பெண்ணரசோ. 74

சாமனுக்கும் பூமனுக்குந்
தக்க சகோதரம்
காமனென வந்துதித்த
கட்டழக னீதானோ. 75

சொர்னம் வழங்கச்
சேர்மான் பலவழங்க
அன்னம் வழங்கவந்த
அதிமகா லட்சுமியோ. 76

மாமனூர் பட்டணத்தை
மாற்றார்கைக் கொள்ளாமல்
சேமமுடன் காக்கவந்த
சிம்மாசனாதிபனோ. 77

காட்டிற் கிணறுவெட்டித்
கல்லாலே தொட்டி கட்டி
நாட்டில் தருமம்வைக்கும்
ஞானமுள்ளான் பெற்றகண்ணோ. 78

பத்தியுட னீஸ்பர்முன்
பாண்டியனார் செய்தவத்தால்
புத்திரனாய் வந்துதித்த
பூமானே கண்வளராய். 79

மாணிக்கத் தொட்டியிலே
வளர்ந்த குமாரனுக்குக்
காணிக்கை கொண்டுவந்து
காண்பார் சிலபேர்கள். 80

திருத்தாலாட்டு முற்றிற்று.

உ

கடவுள் துணை.

குமர தாலாட்டு.

குமராவுனைத்தொழுதேன் குன்றெறிந்தவேன்முருகா
அமராவதிகாக்கு மாறிரண்டுதோளானே. 1

ஆறிரண்டுகைத்தலத்தா லசுரர்தங்கள்சேனையெல்லாம்
வேறிரண்டுகூறுக வேல்விடுத்துவந்தோனே. 2

குயிற்கூவமயிலாடக் கோயிற்றிருச்சங்கூத
ஒயிலானமயிலேறி யுலகாளவந்தவனே. 3

இரண்டுமலைதிரண்டுருள விருகையிலும்வேல்வாங்கி
இரண்டுமலைநாலாக் வெழுந்தருளிவந்தவனே. 4

பச்சைமயிலேறிப் பழத்திற்கொருநொடியில்
செச்சைமுழங்கத் தேயம்வலம்வந்தவனே. 5

தேவாதிதேவன் திருச்செவியிலந்நாளில்
மூவாதமந்திரத்தை மொழிந்தபிரானீயலவோ. 6

தெள்ளிமணல்கொழிக்குஞ் செந்திற்பதிதனிலே
வள்ளிமயங்க மயிலேறிவந்தவனே. 7

நினைத்தவிடந்தோறு நீலமயிலேறிவந்து
மனத்திற்கவலையெல்லா மாற்றும்பெருமானே. 8

என்றுமிளையானே யீராறுதோளானே
அன்றசுரர்வேர்களை யவம்புவியில்வந்தமனே. 9

பொல்லாதநாயடியேன் புன்தலைமேற்பாதம்வைத்தே
எல்லாருங்காண வெழுந்தருளிவந்தவனே. 10

தேன்மருவுஞ்சோலைத் தென்னருணையாநகரில்
வானவர்கள்வந்துதொழ வரமளித்துநின்றவனே. 11

வருணமயிலேறி வள்ளியம்மைதன்னுடனே
அருணகிரிகோபுரத்தி லஞ்சலென்றேநின்றவனே. 12

வம்பலருஞ்சோலை வயற்றணிகைமாநகரில்
கும்பமுலைவள்ளி குறமகட்குவாய்த்தவனே. 13

ஏழையடியார்களெப்போதழைத்தாலும்
வாழுமயிலேறி வந்துவிளை தீர்த்தவனே. 14

மாற்றான்புடைநடுங்க வரமுமயிலேறிவந்து
கூற்றுகச்சேனையெல்லாம் கொன்றுவெற்றிபெற்றவனே. 15

வாரப்பெருமுலையாள் வள்ளியம்மைதன்னுடனே
வீரத்திருப்பதியாம் வேங்கடத்தினின்றவனே. 16

முன்னைப்பிறப்பறுக்க முற்காலஞ்செட்டியென்று
பின்னைமறைக்குப் பிரணவமாய்வந்தவனே. 17

வேங்கைமரமாகி மெல்லியற்குத்தாணிழலாய்
ஓங்கிவளர்ந்தெழுந்தே உதவிசெய்யவந்தவனே. 18

காலில்சிறுசதங்கை கட்டவொண்ணுக்காலமதில்
பாலித்தவெண்ணீறும் பரப்பியபாலகனே. 19

சிவனார்திருமகனே செப்புமறுமுகனே
கவனரதமேறிவருங் கதிர்காமவேலவனே. 20

ஆணிப்பொன்மேனியா னகங்களிக்கவந்நாளில்
மாணிக்கவலிமகிழ வான்பொருளைச்சொன்னவனே. 21

கைத்துவசமசைய காலசையவேலசைய
முத்துவடமசைய முன்வந்துநின்றவனே. 22

நீலக்கடன்மேனி நெடுமாறன்மருகோனே
சாலவுலகனைத்துஞ் சாற்றும்பெருமானே. 23

துள்ளுமயிலேறித் தொலையாதசூரர்களைக்
கொள்ளைகொள்ளவந்த கொற்றமிகும்வேலவனே. 24

வெள்ளிமயிலேறி வேல்வாங்கிவெற்றிகொண்டே
அள்ளித்திருநீறணிந்த வாறுமுகத்தரசே 25

செங்காட்டினின்றே சிறுத்தொண்டன்மகனை
மங்காமற்காத்தளித்த வள்ளன்மகனாரே. 26

வெள்ளியிருங்கொம்புடைய வேழத்தின்பின்பிறந்து
வள்ளிதனைமணந்து வான்மயிலில்வந்தவனே. 27

பொன்றுமவுணர் புரமூன்றும்வெந்துவிழ
அன்றுநகைசெய்த வரனார்திருமகனே. 28

சங்கமிருந்துலவுஞ் சாவணையில்வந்துதித்து
மங்கையுமைதனக்கு வாய்த்தமகனாரே. 29

வேலப்புனத்திருந்து வேடர்தமைக்காத்தருளிக்
கோலக்குறமாது கொங்கைகளிற்சேர்ந்தவனே. 30

கண்ணிரண்டுநீர்சொரியக் கைகுவித்துநின்றவர்க்கு
எண்ணரியநற்பதவி யீகைதந்துநின்றவனே. 31

மூவர்மேழமுனிவர் கணந்தர்மகிழத்
தேவர்சிறைமீட்ட சேவனுநீயல்லவோ. 32

மன்றுதோறுடுவள்ளன் மனங்களிக்கக்
குன்றுதோறுடுங் குமரகுருநீயல்லவோ. 33

வீறுசரவணையில் விளங்குமறுபிள்ளைகளாய்
கூறுபடவேவளர்ந்த குமாரதேவநீயல்லவோ. 34

தாருகாசூரனுடல் தாரணியிலேவிழுக
கூறுடையவேல்விடுத்த கொற்றவனுநீயாமே. 35

அண்டங்குலுங்க வாழியேழுங்கலங்க
திண்டியறல்சேர்கொக்கைவென்ற சேவகனுநீயாமே. 36

உண்ணுமுலைப்பாலை யுண்ணுமல்வாங்கியுண்ட
அண்ணுமலைமகனே யாறுமுகவேலவனே. 37

வையாபுரியானே வாழ்மயிலைவெற்பானே.
ஐயாபழனிமலை யாளுமுருகோனே. 38

மூவர்முனிவர் முப்பத்துமுக்கோடி
தேவர்புகழுந் தெய்வசிகாமணியே. 39

வேதப்பொருளே விளக்கேநல்விண்மணியே
போதப்பொருளே புலவர்சிரோமணியே. 40

கண்ணேகரும்பே கற்பகமேகண்மணியே
விண்ணாறுதே விளங்குமயில்வீரனே 41

பூவின்மணமே பொன்னேபுகழொளியே
தேவின்முதற்றேவே தேவர்சேனாபதியே. 42

பாலிற்சுவையே பகரரியமுக்கனியே
கோலவுமைக்கினிய கோற்றேனே சண்முகனே. 43

கந்தர்தாலாட்டைக் கற்றோருங்கேட்டோரும்
இந்திரனைப்போல வினுதூழிவாழ்ந்திருப்பார். 44

நற்கிரதேவர் நயந்துரைத்தவாய்மொழிக்கே
எக்காலங்குற்றமில்லை யென்பார்கள்கற்றோரே 45

குமரதாலாட்டு முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நூதன பிள்ளைத் தாலாட்டு.

சீரார்செல்வச் சிறுபிள்ளைத்தாலாட்டு
பாரார்மகிழப் பாடுதற்குநீரார்
வேணியாநம்பிக்கையும் வைத்துவிளையாடுகின்ற
ஆனைமுகன்றாளென் அணி.

ஆராரோ ஆராரோ ஆரரிரோ ஆராரோ
சீராறு மெங்கள்குல சிகாமணியே ஆராரோ.

கண்ணேநவமணியே
கற்பகமே முக்கனியே
என்னாருயிரானே
இந்திரனே கண்வளராய். க

கொட்டி வைத்தமுத்தே
குவிந்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேஎன்
கண்மணியே நித்திரைசெய். உ

நித்திரைசெய் நித்திரைசெய்
நெடியபுவி மன்னவனே
சித்திரபூந் தொட்டிலிலே
சிகாமணியே நித்திரைசெய். ௩

கரும்புசரமே என்
கசக்காத முக்கனியே
அரும்பா மலிர்மணமே
அறுமுகனே கண்வளராய். ௪

மாத்துயர்ந்த பொன்னேஇந்த
மண்டலத்து அதிபதியே
பூத்தபுதுமலரே-என்
பொக்கிஷமேகண்வளராய். 5

மருவேமருக் கொழுந்தே
மலர்விரிந்த மல்லிகையே
குருவே ரம்பே-என்
குலக்கொழுந்தே கண்வளராய். 6

கிள்ளைகுயில் மொழியேநான்
கண்டெடுத்த பொக்கிஷமே
பிள்ளைகலி தீர்க்கவந்த
பெருமானே கண்வளராய். 7

மாயன்மகளார்க்கு
மாப்பிள்ளையாநீ வந்தவனே
தாய்சொல் தவராத
தனஞ்செயனார் நீதானே. 8

சீதைக்கதி பதியோ
சிலயேந்தும் ரகுபதியே
தந்தைச்சொல் தட்டாத
தருமதுரை நீதானே. 9

ஒருமாங் கனிக்காக
உலகவளம் செய்துவந்த
பெருமாள் மருமகனே
பெண்ரதிக்கி மாப்பிள்ளையோ 10

கருப்புக் கனையானே
கன்னிவள்ளி நாயகனே

பரமன்றனை யடித்த
பாண்டியனோ நீதானோ. 11

ஆரடித்து நீயழுதாய்
அழுதகண்ணில் நீர்ததும்ப
பேரையுரைத் தாக்கால்
பெருவிலங்கு பூட்டிடுவேன். 12

அத்தையடித்தாளோ உனக்கு
அமுதூட்டும் கையாலே
சற்றேமனம் பொருத்து
சந்திரனே கண்வளராய். 13

பாட்டியடித்தாளோ உன்னை
பால்வார்க்கும் கையாலே
கூப்பிட்டு நான்கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய். 14

மாமியடித்தாளோ உன்னை
மைதீட்டுங் கையாலே
சாமிமனம்பொருத்து
சண்முகனே கண்வளராய். 15

தாயனடித்தானோ உன்னை
தயிரூட்டும் கையாலே
நிமிஷம் மனம்பொருத்து
நித்திரைசெய் கோமானே. 16

அக்கா அடித் தாளோ உங்கள்
அம்மான்மார் வைதாரோ
மிக்காகத் தேட்புவதேன்
வித்தகனே கண்வளராய். 17

பெரியதப்பிதமோ உன்னை
பெற்றாளடித்த துண்டோ
அறியாமல் செய்தாலும்எங்கள்
ஆரமுதே கண்வளராய். 18

அழாதே அழாதேஎங்கள்
அரசே அழாதேநீ
கொழுவார் மலரிருக்க
துரையேநீ கண்வளராய். 19

ஆம்பல் மலர்போலே
அடிக்கநீ வாய்திறந்து
தேம்பி யழாதேநீ
தினகரனே கண்வளராய் 20

நீராட்டி மைதீட்டி
நிலாக்காட்டி பொட்டுமிட்டு
சீராட்டும் வேளையல்லோ
சித்தகனே கண்வளராய். 21

அந்திநிலாகாட்டி உனக்கு
அமுதூட்ட வேணுமல்லோ
மைந்தன் கலிதீர்த்த
மந்திரியே கண்வளராய். 22

வாடாதே பூவே
வாணுலகின் தாராவே
தேடாத பொன்னேஎன்
திரவியமே கண்வளராய். 23

துரைமுகத்து வியாபாரி
துரைமார்கள் உங்களம்மான்

திரவியங்க ளெண்கோடி
தேடிவைப்பார் கண்வளராய். 24

கப்பத்துரை முகத்தார்
கனசாலி உங்களம்மான்
பொற்பணிகள் கொண்டுவந்தார்
புண்ணியனே கண்வளராய். 25

கோட்டையதிகாரி
கொடிகார ருங்களம்மான்
கேட்டதெல்லான் தான்தருவார்
கிளிமொழியே கண்களவளராய் 25

ஆனைவிற்கும் வர்த்தகர்கள்
அதிகாரர் உங்களம்மான்
சேனைத்தலைவரிதோ உங்கள்
சின்னண்ணா வந்தார்காண் 27

பட்டுஜவுளிகளும்
பலபணியும் கொண்டுவந்தார்
கட்டியலங் கரிப்பார்
கற்பகமே கண்வளராய் 28

கோட்டைப் புதுலேஞ்சி
கொடிமதுரைப் பட்டுகளும்
பாட்டனார் கொண்டுவந்தார்
பாக்கியமே கண்வளராய். 29

பொம்பாயிப் பட்டு
புதுக்கோட்டை லேஞ்சிகளும்
அம்மான்மார் கொண்டுவந்தார்
அணுப்போது கண்வளராய். 30

பொன்னா லெழுத்தாணி
பட்டோலைப் புத்தகமும்
சின்னண்ணு கொண்டுவந்தார்
சிறும்பொழுது கண்வளராய். 31

சோமனொளிபோலே
சோதிமிகும் பாதரசம்
மாமனர் கொண்டுவந்தார்
மதிபதியே கண்வளராய். 42

மின்னற்கொடிபோலே
மாற்றுயர்ந்த பொன்னரைஞாண்
அண்ணு ரளிப்பார்காண்
அர்ச்சுனனே கண்வளராய். 33

சின்னஞ்சிறுவிகட்கு
சித்திரம்போல் மோதிரங்கள்
பொன்னாலுனக்களிப்பேன்
புரந்தரனே கண்வளராய். 34

பாங்கிமார் கையேந்திஉனக்கு
பணிபூட்டத் தாலாட்டி
தாங்கிமுலைக் கொடுப்பார்
தனஞ்செயனே கண்வளராய். 35

வஞ்சிமார் கையேந்தி
வகைவகையாய்த் தாலாட்டி
கொஞ்சிமுலைக் கொடுப்பார்
குமரேசா கண்வளராய் 36

வட்டக் கலசமது
வாய்நிறம்பப் பாலருந்தி

இட்டசிறு தொட்டிலிலே
இந்திரனே கண்வளராய். 37

தந்தைமனங் குளிரஉன்
தந்தைமார் சீராட்ட
மைந்தன் கலிதீர்த்த
மன்னவனே கண்வளராய். 38

நூதனபிள்ளை தாலாட்டு
முற்றிற்று.

உ

சிவமயம்

ஆண்பெண் தாலாட்டு.

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ

முத்தேபவளமே முக்கனியே சர்க்கரையே
கொத்துமரிக்கொழுந்தே கோமளமேகண்வளராய்
பொன்னேநவமணியே பூங்கொடியேபூஷணமே
அன்னமேஎம்முடைய ஆசையேகண்வளராய்
கற்கண்டேபாகே கனிரசமேசெங்கரும்பே
கற்பகமேயெம்முடைய காதலனேகண்வளராய்
தித்திக்கும்பாகே தெவிட்டாததெள்ளமுதே
சித்தித்துடன்களிக்கும் செங்கரும்பேகண்வளராய்
ஆணிப்பசும்பொன்னே ஆராததெள்ளமுதே
மாணிக்கமேயெங்கள் வாழ்வேநீகண்வளராய்

ஆராரோ ஆரரெரோ ஆணரசே ஆரரெரோ
சீராரு மெங்கள்குல தீபமே ஆரரெரோ

சீர்மேவுமாமணியே தேடக்கிடையாவணியோ
பார்மேவுகண்மணியே பாலகனேகண்வளராய்
எங்கள்குலபாக்கியமே எல்லோர்க்கும்யோக்கியமே
மங்களஞ்சேர்தெள்ளமுதே மைந்தனேகண்வளராய்
வண்ணமணித்தொட்டிலிலே வாய்த்தசெம்பொற்கட்டிலிலே
கண்ணேயென்கண்மணியே கற்பகமேகண்வளராய்
சோலைக்கிளியே சுடர்விளக்கேபொன்னொளியே
ஆலைக்கரும்பேயென் னாரமுதேகண்வளராய்
முத்துச்சரந்துலங்க மோகனமாலையிலங்க
கொத்துமணிகுலுங்கக் கோமகனேகண்வளராய்

முத்துக்குடைபிடிக்க முன்னூற்கவிபடிக்க
சித்திரத்தேரேறிவரும் செல்வமேகண்வளராய்
மன்னர்புடைசூழ்ந்துவர மாற்றரசர்தாழ்ந்துவர
உன்னிதமாய்பவனிவரும் உத்தமனேகண்வளராய்
மன்னுஞ்செங்கோலெங்குஞ்செல்ல மந்திரிகள்புத்திசொல்ல
தென்னவன்போலரசாளும் தேர்வேந்தேகண்வளராய்
திக்கெட்டுமன்னர்வந்து செல்லும்பகுதிதந்து
மிக்கபதம்வணங்கும் வேல்வேந்தேகண்வளராய்
அன்னக்கொடிபறக்க ஆலயப்பூசைசிறக்க
மன்னுதர்மஞ்செய்துவரும் வள்ளலே கண்வளராய்
வெற்றிமுரசரைய வீர்மன்னர்தாம்பணிய
ஊற்றபோர்வென்றுவந்து ஓங்காரசேகண்வளராய்
வாசப்பனிநீர்தெளிக்க மாற்றரசர்தாமொளிக்க
தேசமெங்குஞ்சாரிவரும் தேசிகனேகண்வளராய்
முத்துச்சிவிகையுள்ளே முத்துக்கவிகைக்குள்ளே
சித்தமகிழ்ந்தேறிவரும் சிரோன்மணியேகண்வளராய்
ஆலவட்டம்வீசிவர அந்தணர்களாசிகூற
கோலம்வருமெங்கள் குலக்கொழுந்தேகண்வளராய்
தண்டைபணிசத்தமிடத் தாய்மார்கள் முத்தமிட
கண்டுவாய்மூடியெங்கள் காவலனேகண்வளராய்
அத்தைமனம்நோவாமல் அன்னைமனம்நோவாமல்
சித்தமிரங்கிமன்னர் சிகாமணியேகண்வளராய்
தாய்மார்கள்வைதாரோ தாதியரேன்செய்தாரோ
வாயாரச்சொல்லியெங்கள் மன்னவனேகண்வளராய்
அத்தையடித்தாளோ அம்மானடித்தாரோ
முத்துக்கண்ணீர்நிறுத்தி மோகனமாய்கண்வளராய்
பாட்டியடித்தாளோ பால்வார்க்குங்கையாலே
வாட்டமொழிந்துநீ மைந்தனேகண்வளராய்

மாமியடித்தாளோ மல்லிகைப்பூசெண்டாலே
சாமிபுலம்பாதே சண்பகமேகண்வளராய்
அத்தைமடிமேலும் அம்மான்மார்தோள்மேலும்
வைத்துமுத்தாடும் மரகதமேகண்வளராய்
ஆயர்குலத்தில் அவதரித்தமாமணியே
மாயனேகண்ணே மகிபனேகண்வளராய்
அத்தையடித்தாரோ அக்காளடித்தாளோ
முத்தானவாய்திரந்து மொழிந்துரங்காய்கண்மணியே
மாமியவள்குட்டினளோ மாபாவிதிட்டினளோ
சாமியேயுன்மனது சலித்ததென்னகண்மணியே
மைத்துனர்களேசினரோ மனம்நோகப்பேசினரோ
சித்தஞ்சலித்தழுது தேம்புவதேன்கண்மணியே
தங்கத்தாலானைகளும் தந்தத்தால்சேனைகளும்
பொங்கமாயான்கொடுப்பேன் புத்திரனேகண்வளராய்
அம்மான்பொற்றேர்கொடுப்பார் ஆடும்பரிவிடுப்பார்
எம்மானேநீயுமன்பாய் ஏறுவாய்கண்மணியே
மார்பதக்கமின்ன மகரகண்டியாரந்துன்ன
சீர்பெருபூந்தொட்டிலுள்ளே தேனேநீகண்வளராய்
பஞ்சவர்னக்கிளிகொஞ்ச பாரக்குயிலோசைமின்ன
எஞ்சலில்லாப்பஞ்சணையில் என்மகனேகண்வளராய்
பொன்னுலெழுத்தாணி பூமிபலகாணி
எந்நாளுஞ்சொந்தமா யான்கொடுப்பேன்கண்வளராய்
வாடிமுகம்வீங்கி மனதுதளர்ந்தேங்கிப்
பாடியழவேண்டாமென் பார்த்தீபனேகண்வளராய்
முத்தளக்குஞ்சாலையிலே முதலாக்குஞ்சோலையிலே
அத்தைமகள்வந்ததைக் கண்டாயேசேநீகண்வளராய்
கண்காட்டுமாதர்பலர் கைகாட்டுமாதர்சிலர்
பண்காட்டுவாங்கிரங்கிப் பாலகனேகண்வளராய்

துள்ளத்துடிக்கத் தோகையர்கால்பிடிக்க
வெள்ளமருந்தளிப்பார் வேந்தனேகண்வளராய்
காட்டுப்புலியானை கரடிசிங்கம்வன்பூனை
ஓட்டிவிட்டேன்கண்மணியே உவப்புடனேகண்வளராய்
பட்டாடப்பொட்டாடப் பணியாடமணியாட
தொட்டோடுந்தொட்டிலுள்ளே தோன்றலேகண்வளராய்
தீர்த்கம்பலதேடி திருமஞ்சனமாடி
கீர்த்திபெறுந்தந்தைமைந்தர் கிட்டவந்தாற்கண்வளராய்
வண்ணமலரெடுத்து மாலைமிகத்தொடுத்துப்
பெண்ணரசிமார்கள்வந்தார் பேரரசேகணவளராய்
சரிந்துபனிநீர்வாசச் சுவ்வாதுதான்வீச
ஏந்திழையாரேந்திவந்தார் என்னரசேகண்வளராய்
தோள்குலுங்கக்கைகுலுங்கத் சொல்லுந்தருமெய்குலுங்க
தாள்குலுங்கவாள்குலுங்கத் தார்வேந்தேகண்வளராய்
தார்மன்னர்தாமெடுக்கக் சத்துருக்கள்பொன்கொடுக்கப்
போர்வென்றுகீர்த்திபெறும் பூபதியேகண்வளராய்
கன்னன்கொடைமாறக் கலியுடைந்தோர்தான்வீறச்
சொர்ன்னமளக்குமெங்கள் சுத்தனேகண்வளராய்
மாரனழகொழிய மாதர்மகள்கொண்டழிய
தீரமுடன்வந்துதித்த சித்திரமேகண்வளராய்
சொல்லிலரிச்சந்திரனே சுகபோகவிந்திரனே
வில்லிலருச்சுனனே விண்மணியேகண்வளராய்
எங்கள்குலம்பெருக என்வகைபாக்கியம்பெருக
மங்களமாய்வந்துதித்த மகிபதியேகண்வளராய்

ஆண் தாலாட்டு

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பெண் தாலாட்டு.

ஆரரெரோ ஆரரெரோ அரிவையரே ஆரரெரோ
சீராருந்தெள்ளமுதே தெரிவையரோ ஆரரெரோ

தத்தைமொழிமின்னரசி தாரணிந்தபெண்ணரசி
சித்தமகிழ்ந்து தெரிவையரேநித்திரைசெய்
அன்னநடைகண்மணியே அரிவையர்கள்வின்மணியே
பொன்னிழைத்ததொட்டிலுள்ளே பூவையரேநித்திரைசெய்
வண்ணமடமயிலே மாமரத்தில்வாழ்குயிலே
பெண்ணரசேபஞ்சணைமேல் பிரியமுடன்நித்திரைசெய்
மின்னலிடைவஞ்சையரே வீறுமென்றன்றங்கையரே
கன்னல்மொழிதெள்ளமுதே காரிகையேநித்திரைசெய்
முக்கனிபோற்சொல்லாளே மொழிப்புருவவில்லாளே
அக்குமணித்தொட்டிலுள்ளே அரிவையரேநித்திரைசெய்
கண்ணிற்குமைதீட்டி காலிற்பணிபூட்டி
பெண்ணரசியாய்வளர்க்கும் பேதையரேநித்திரைசெய்
வண்ணமலர்சூடி மன்னும்பணிபூட்டித்
திண்ணமுடன்வளர்க்கும் தேன்மொழியேநித்திரைசெய்
பொன்னுலைமூடிப் பொற்கயற்றினுற்சூட்டி
மன்னர்மெச்சதான்வளர்க்கும் மாதரசேநித்திரைசெய்
பட்டுத்துயில்விரித்துப் பாவாடைமேல்தரித்துப்
பொட்டிட்டுத்தான்வளர்க்கும் பெண்மயிலேநித்திரைசெய்
வாசப்பனிநீராட்டி மன்னும்வளைபூட்டி
ஆசையுடன்வளர்க்கும் அன்னமேநித்திரைசெய்
பந்தடிக்கும்பெண்களோர்பால் பாடிவரும்பெண்களோர்பால்
வந்துதொழமெல்லணையிற் வாணுதலேநித்திரைசெய்

கட்டிக்கருப்புரம்பற்றிக் கன்னிகையேயுன்னைசுற்றி
திட்டிகழிக்குமுன்னே செந்தேனேநித்திரைசெய்
கோலந்தொடுத்தே கூரைமிகவடுத்தே
ஆல்மெடுக்குமுன்னே அம்பொன்னேநித்திரைசெய்
குச்சுக்குப்தான்முடித்து கொச்சகமுந்தான்மடித்து
கச்சி தமால்கட்டிவளர் கார்குழலேநித்திரைசெய்
உத்தமியாளெனுமிரதி உன்னழகைக்கண்டுதுதி
நித்தம்வந்துசெய்துநிற்கும் நேரிழையேநித்திரைசெய்
நீடுமொருநாளையிலே நினைத்தபலவேலையிலே
வாடியழுவதென்ன வாழ்மயிலேநித்திரைசெய்
அத்தைமசனூர்வந்தார் ஆயிரம்பொன்சேலைதந்தார்
சித்தமகிழ்வால்நீ திறமுடனேநித்திரைசெய்
மாமன்மணிமாலை மாசிலாப்பொற்றசேலை
பூமாலையோடளித்தார் பொற்கிளியேநித்திரைசெய்
பொன்னடுப்புப்பொன்துடுப்பு பொன்மணிதேர்நல்லுடுப்பு
அன்னைமொணர்ந்திங்குவைத்தா ளாரிழையேநித்திரைசெய்
புவாலேசெண்டும் பொய்த்திடாநற்கற்கண்டும்
ஆமலால்த்தாய்கொடுத்தாள் ஆயிழையேநித்திரைசெய்
தங்கத்தாற்கட்டிமுட்டி சாதமுண்ணவெள்ளிவட்டி
உங்களையர்கொண்டுவந்தார் உத்தமியேநித்தரைசெய்
தந்தத்தாற்பொற்பாவை தரளவடக்கோவை
அந்தமுடன்பாட்டிவைத்தாள் அம்மணியேநித்திரைசெய்
பாதசரம்பாடகமும் பாடிமின்னூலாடகமும்
தாதியர்கள்வந்துதந்தார் தையலேநித்திரைசெய்
வயிரத்தாற்நற்காப்பும் வண்ணமணிச்சீப்புப்
உயிர்தோழிமார்கொடுத்தார் உத்தமியேநித்திரைசெய்
தேம்பியழுவதென்ன தெத்திவிழுவதென்ன

காம்புலையதோழியரே கண்மூடிநித்திரைசெய்
நடைபழக்கப்பாவாடை கீடுப்பரப்பிப்பூவாடை
படைவிழியேநீநடப்பாய் பஞ்சணையில்நித்திரைசெய்
அத்தைமேற்கோபமோ அவனியில்மனஸ்தாபமோ
கொத்தாரும்பூங்குழலே கோமகளேநித்திரைசெய்
ஒருபெருவாழ்வு உனக்கென்னசொற்றாழ்வு
போகக்கிளியே புவளியேநித்திரைசெய்
ஏழுநிலைமாடமதில் ஏகாந்தக்கூடமதில்
வாழும்மயிலேகுயிலே வாழ்வரசேநித்திரைசெய்
முத்துப்பல்லக்கேற்றி மூதுலகலேவீறிச்
சித்திரமேசாரிவரும் சேயிழையேநித்திரைசெய்
வாடியழுதகண்ணீர் மஞ்சள்குளித்தகண்ணீர்
ஓடிப்பெருங்கடலாய் உற்றதம்மாநித்திரைசெய்
பள்ளாங்குழியாடிவந்தாய் பந்தடித்துமிக்கநொந்தாய்
கள்ளத்தனம்நானறியேன் கன்னியேநித்திரைசெய்
சித்திரத்தேயெழுதவொண்ணுத் திருவுருவேமலர்மருவே
புத்திரியேமித்திரியே புக்கனியேநித்திரைசெய்
மானேபசுந்தேனே மருட்டுவிழிமீனே
நானேமகிழவந்த நாயகமேநித்திரைசெய்
பூதங்கண்டுதான்வெருண்டாய் புலியைக்கண்டுமேமருண்டாய்
நீதமந்திரம்புரிந்து நீநடுவேநீத்திரைசெய்
சொல்லுநவமணிகள் சோதிமிகுபொற்பணிகள்
வல்லபலபேர்களேபூண் மைவிழியேநித்திரைசெய்
எங்கள்குலம்விளங்க எழிலார்மனைதுலங்க
பொங்கமதாய்வந்துதித்த பொன்னேநித்திரைசெய்
மாணிக்கதீபமே மதனரதிரூபமே
ஆணிக்கனகமே ஆரணங்கேநித்திரைசெய்

ஆசைக்கடலேயென் னபரஞ்சியாமுடலே
ஓசைக்குயிலே ஒளிமயிலேநித்திரைசெய்
பிள்ளைகலித்தீர்க்கவந்த பெண்ணமுதேவிண்ணமுதே
தெள்ளுமணியே திகழ்விளக்கேநித்திரைசெய்
தங்கவடம்பூட்டித் தாதிமார்தொட்டாட்டிப்
பொங்கமுடன்வளர்க்கும் பொற்கொடியேநித்திரைசெய்
கும்பமுலைதிரந்து கோதையார்கள்பால்கரந்து
செம்பொற்கிண்ணத்தில் கொடுப்பார்செழுங்கிளியே
தாலாட்டைப்பாடுகிறோம் தங்கநகைபூட்டுகிறோம்
நீலாயதாட்சியரே நீமகிழ்ந்துநித்திரைசெய்
ஆடல்மிகுராஜா மணியம்மாள்செப்பிவந்த
பாடல்கேட்டெங்கள்தவ பாக்கியமேநித்திரைசெய்

பெண் தாலாட்டு

முற்றிற்று.

புத்தக விளம்பரம்

கல்யாண வாழ்த்து, லாலி, ஊஞ்சல், நலங்கு இவைகள்	0	2
சரஸவினோதை கல்யாணபாட்டு சம்மந்தி மாப்பிள்ளைமீது ஏசல்	0	2
ருக்மாங்கத சரித்திரம்	0	2
அம்பரிஷ சரித்திரம்	0	2
சீதா கல்யாணம்	0	2
சுபத்திரை கல்யாணம்	0	2
ராஜ கிரீடை	0	2
சிறுத்தொண்டநாயனார் சீலவதி சரித்திரம் கீர்த்தனை	0	2
எக்கியபத்தினி சரித்திரம்	0	2
பார்வதிஅம்மாள் சோபனம்	0	2
துரோபதி சரித்திர கீர்த்தனை	0	3
அண்டப்புலவன் ஆகாசப்புளுகன் சண்டை திடீல்புலவன் மத்தியஸ்தம்	0	1
டிராம்காருக்கும், மோட்டார்காருக்கும் சண்டை கால்நடை பிரபுமத்தியஸ்தம்	0	1
பீடிக்கும் சுருட்டுக்கும் சண்டை சிகிரேட் பிரபு மத்தியஸ்தம்	0	1
இங்லீஷுக்கும், தமிழுக்கும் சண்டை இந்துஸ்தான் மத்தியஸ்தம்	0	1
குசேல மாமுனி சரித்திர கீர்த்தனை	0	10
திருப்பதி தேர்வண்டி கால் சரித்திரகீர்த்தனை	0	8
வேணுகோபால் தாஸ் கீர்த்தனை	0	6

எமது விலாசம்:—

பெ. ஆறுமுக முதலியார்.

நெ. 42 வதுசந்து பெருமாள்கோவில் தோட்டம்.

சென்னை.